**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.**

**அசல் வழக்கு எண்.163/2010**

2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969ம் ஆண்டு 54 விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.அ.சீனிவாசன், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அசோக்குமார் | தந்தை/கணவர் பெயர் | : |
| ஜாதி | : | கிராமம் | : |
| வட்டம் | : | மதம் | : |
| தொழில் | : | வயது | : |

நாள் : 22.12.2022

**P.W. : 1**

**2 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

சீரங்க கவுண்டர் குடியிருக்கும் வீட்டின் கதவு எண். 37/41 ஆகும். குமரசாமியின் வீட்டின் கதவு எண். 37/41 ஆகும். இருவரும் ஒரே வீட்டில் குடியிருந்து வருகிறார்கள். சீரங்க கவுண்டர் குடியிருக்கும் கதவு எண். 37/1 என்று சொன்னால் அது தவறு. நான் என்ஜினியரிங் வரை படித்துள்ளேன். நான் 12 ம் வகுப்பு வரை துறையூர் ஜமின்தார் மேல்நிலைப்பள்ளியில் படித்தேன். அங்கே 30ஏ, அன்னை இந்திரா நகர் என்ற விலாசத்தில் இருந்து படித்து வந்தேன். அந்த வீடு என் தகப்பனார் பெயரில் உள்ளது என்றால் அது என் அம்மா பெயரில் உள்ளது. அந்த வீடு எந்த வருடம் கிரையம் வாங்கப்பட்டது என்றால் 1978ல் வாங்கப்பட்டது. முசிறியில் சீரங்க கவுண்டர், குமரசாமி கவுண்டர் பெயரில் உள்ள

நிலமானது அவர்கள் இருவரின் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். முசிறியில் உள்ள நிலம் மற்றும் வீடானது சுமார் 10 ஏக்கருக்கு சற்று குறைவாக இருக்கும். என் பெயரில் எவ்வளவு நிலம் என் தகப்பனார் எழுதிக் கொடுத்துள்ளார் 4.5 ஏக்கர் ஆகும். அவ்வாறு எந்த வருடம் எழுதிக் கொடுக்கப்பட்டது என்றால் 2010ல் எழுதிக் கொடுக்கப்பட்டது. என் தாத்தா ரோடு கன்ட்ராக்ட் எடுத்து செய்தாரா என்றால் அவர் செய்யவில்லை. என் பெரியப்பா சீரங்க கவுண்டருக்கும் என் தகப்பனார் குமரசாமிக்கு அவர் உதவி செய்தார்.

**(2 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக கால அவகாசம் வழங்கப்பட்டது).**